*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
*IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,*
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | |
|---|---|---|
| S.C. No. | : | 264/2019 |
| Deposition of witness | : | PW-16 |
| Name | : | விஜயராணி |
| Father's /Husband Name | : | |
| Village/Town | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Occupation | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of January 2023. 05-01-2023

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். நீடாமங்கலம் தாலுக்கா வடுவூரில் குடியிருக்கிறேன். நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, 06/06/2019 ஆம் தேதி நிலையத்தில் பணியில் இருந்த போது, குளிச்சப்பட்டை சேர்ந்த ரங்கசாமி மகன் கோவிந்தசாமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக புகாரை கொடுத்தார். அந்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 208/2019 ச/பி 147, 149, 323, 324, 302 இதசவாக வழக்கு பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை என்னால் பதிவு செய்யப்பட்டது தான். அது **அ.சா.ஆ.11 ஆகும்.** பின்னர் அன்றையதினமே தலைமை காவலர் பாஸ்கரன் என்பவர் மூலமாக நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை நகலை மேல் நடவடிக்கைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரனை:**

புகார் கொடுப்பதற்கு கோபிநாத் என்பவர் வந்தார். அவருடன் வேறு யாரும் வந்தார்களா என்று ஞாபகமில்லை. புகாரை காவல் நிலையத்திற்கு வந்தபிறகு தான் எழுதினாரா என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்த முந்தின நாள் காவல் நிலையத்தில் யார் பொறுப்பில் இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக தகவல் எதுவும் கொடுக்கப்பட்டால் பொது நாட்குறிப்பில் எழுதிக்கொள்வார்கள் என்றால் சரிதான். புகார் பெற்ற தேதிக்கு முந்தின

நாள் நான் காவல் நிலையத்தில் பணியில் தான் இருந்தேன். புகார் கொடுத்த தேதிக்கு முந்தின நாள் இரவே அம்மாபேட்டை காவல் நிலையத்திற்கு குளிச்சப்பட்டு கிராமத்தில் இருந்து தொலைபேசியில் தகவல் கொடுக்கப்பட்டு, அம்மாபேட்டை காவல் நிலைய காவலர் அன்று இரவே போயிவிட்டார்கள் என்றால் போயிருக்கலாம். நான் புகார் பெறும் வரை தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் எதுவும் பெறப்பட்டதா என்று ஞாபகமில்லை. புகார் கொடுத்த கோபிநாத்திற்கு காயம் எதுவும் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை. அ.சா.1 கோபிநாத் எழுத்து மூலமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அவரிடம் எழுதாத பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு பின்னர் வழக்கிற்கு எற்றாற்போல் புகாரை பூர்த்தி செய்துக்கொண்டோம் என்றால சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.ஆ.1 புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அச்சு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 06/06/2019 அன்று 12.00 PM மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 06/06/2019 ஆம் தேதி இரவு 12 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் என்னுடைய கையொப்பத்திற்கு அருகே குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.